(Sri N. K. Palanisami rose.)

MR. SPEAKER : The hon. Member is making suggestions for improvement during Question time.

SRI M. KALYANASUNDARAM : The hon. Member is eliciting information, Sir.

MR. SPEAKER : For information on such points, the hon. Member should write either to the Minister or to the Superintendent and get the information. He cannot ask what is happening in General Hospital or what is happening here and there, and the Assembly is not the forum for such questions. He should not be making suggestions for improvement during question hour.

SRI N. K. PALANISAMI : நான் மட்டுமல்ல, பல பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? I want to elicit information, Sir.

MR. SPEAKER : பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் சொல்லியிருந்தால் இந்த சபைக்கு என்ன சம்மந்தம்? சரி கேளுங்கள்.

SRI N. K. PALANISAMI : கனம் மந்திரி மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறதாகச் சொன்னார்கள். என்ன எழுதியிருக்கிறார்கள் என்று விவரம் தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்க்ரீஸ்ட் அமெனிடீசுக்காக எழுதியிருக்கிறோம். எனக்கு இப்பொழுது டீடெயில்ஸ் தெரியாது. அங்கிருந்து முடிவான பதில் வரவில்லை.

SRI M. KALYANASUNDARAM : அந்த ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர்களிடமிருந்து என்னென்ன கோரிக்கைகள் வந்தன? என்ன உதவி வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதிக் கேட்டிருக்கிறார்கள்?

MR. SPEAKER : The hon. Member must put a separate question for such details.

கேள்வி நேரம் இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கிறது. நாம் பதினைந்து நிமிஷம் எடுத்துக்கொள்ளலாம். கேள்வி போட்டவருக்கு மட்டும் ஒரு உப கேள்வி வீதம் அனுமதிக்கிறேன். ரொம்ப முக்கியமாக இருந்தால் மற்ற கனம் அங்கத்தினர்களையும் அனுமதிக்கிறேன்.

Deputy Sevaks

*223 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை டிப்டி சேவக்குகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்?

(இ) இவர்களின் வேலை என்ன?

(உ) இவர்களால் தாழ்த்தப்பட்ட மக்கள் அடைந்த நன்மை என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) Deputy Sevaks have been employed at the rate of one for each taluk. Two Deputy Sevaks have been appointed for Madras City. In addition, two special Deputy Sevaks are working with Headquarters at Tiruchirappalli.

(இ) & (உ) It is the duty of the Deputy Sevaks to create proper psychology among the Harijans and Non-Harijans to facilitate early removal of untouchability. For this purpose the Deputy Sevaks will arrange for meetings, social dramas, bhajans, etc., and also work for throwing open to the Harijans public wells, tanks, hotels and temples. They will also carry out such other ameliorative measures as are beneficial to the Harijans under instructions from the Collectors concerned.

The two special Deputy Sevaks at Tiruchirappalli will tour the whole State to carry on propaganda for removal of untouchability and also to train the other Deputy Sevaks, school pupils and others in the art of 'Villupattu' and other performances calculated to persuade the people to remove untouchability.

SRI S. RAMALINGA PADAYACHI : டெபுடி கிராம சேவக்குகள் கிராமங்களுக்கு வந்து பிரசாரம் செய்ததாகத் தெரியவில்லை என்று அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, டெபுடி கிராம சேவக்குகள் எந்த எந்த கிராமத்திற்கு எந்த எந்த நாள் போகிறார்களோ அதற்கு முன்பாக, அந்தக் கிராமத்திற்குக் குறிப்பு அனுப்புவதோடுகூட, அப்படிப் போகும்போது கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து போர்டின் ஹரிஜன மெம்பரிடமிருந்து கையெழுத்து வாங்கவேண்டுமென்ற முறையில் அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI P. KAKKAN : பஞ்சாயத்து போர்டு மெம்பரிடமிருந்து கையெழுத்து வாங்கவேண்டுமென்றால், பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் சொல்வதை டெபுடி சேவக்குகள் கேட்க வேண்டிய நிலைமை வரும். இந்த சேவக்குகள் ஹரிஜன நல அதிகாரியின் கீழ் வேலை செய்கிறார்கள். எந்த பிளாக்கிலே அவர்கள் வேலை செய்கிறார்களோ, அந்தப் பிளாக்கில் உள்ள ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரி அவர்களைப்பற்றி ரிபோர்ட் அனுப்பவேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : டெபுடி சேவக்குகள் ஹரிஜனங்களிடையே நல்ல சேவை செய்து வருவதாக எங்கள் ஜில்லாவில் தெரிகிறது. டெபுடி சேவக்கு ஒரு தாலூகா பூராவும் அதிகப்படியான தூரம் சுற்றவேண்டியிருப்பதால், ஒவ்வொரு பிளாக்குக்கும் ஒரு டெபுடி சேவக்கு வீதம் போடுவதற்கும், டெபுடி சேவக்குகளைக் கூடுமானவரை ஹரிஜன் அல்லாதாரைப் போடாமல், ஹரிஜனங்களையே போடுவதற்கும் சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : கூடுமானவரை பெரும்பகுதி ஹரிஜனங்களைத்தான் டெபுடி சேவக்குகளாகப் போட்டிருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு பிளாக்குக்கும் டெபுடி சேவக் போடுவதென்பது இயலாத காரியம்.